கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 234/2019

வாதி தரப்பு சாட்சி -1 முத்துலிங்கம் திருமதி.ஏ.பிரேமா பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 13.11.2024 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**1 முதல் 4 பிரதிவாதிகள் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. எனது தாத்தா எனக்கும் எனது சகோதரர் குடியரசுக்கும் 11.09.1984 ம் தேதி எழுதிவைத்த தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்தேன். மேற்படி ஆவணத்தில் சர்வே எண்.760/1A ல் 50 செண்ட்டும், சர்வே எண்.782/27 14 செண்ட் நிலத்தையும் எழுதி வைத்தார் என்றால் சரிதான். மேற்படி தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின் சான்றிட்ட நகல் பி.சா.ஆ.2 குறியீடு செய்யப்படுகிறது. பி.சா.ஆ-2 சொத்திற்கு வடபுறம் உள்ள சொத்துக்களை எனது தாத்தா அவரது வாரிசுகளுக்கு தலா 1 ஏக்கர் பிரித்து கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். பி.சா.ஆ.2 ஆவணத்தில் அவ்வாறு பிரித்து கொடுத்த சொத்திற்கு தெற்கு என நான்கு எல்லையில் கண்டுள்ளது என்றால் சரிதான். சீனிவாசன் வீடு கட்டி 20 வருடங்கள் இருக்குமா என்றால் 2007 ல் கட்டினார்.

2. மேற்படி வீடு கட்டிய இடம் சீனிவாசனுக்கு பாகம் பிரிந்தது என்றால் சரியல்ல பொது இடம். எனது தாத்தா அவரது வாரிசுகளுக்கு பாகம் பிரித்து கொடுத்து சுமார் எவ்வளவு இருக்கும் என்றால் சுமார் 215 வருடங்கள் இருக்கும். தோட்டத்தை பாகம் பிரித்து கொடுத்தார். அவரவர் பெயரில் தனிதனியாக பட்டா வந்துவிட்டது. தாவா சொத்திற்கான பட்டா சீனிவாசன் , சந்திரன் பெயரில் உள்ளதா என்றால் பத்திரம் எனது தாத்தா பெயரில் உள்ளது. பட்டாவை பின்னிட்டு மாற்றிவிட்டார்கள். தாவா சொத்துக்களுக்கு எனது தாத்தா பெயரில் உள்ள பட்டாவை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பூமிதான இயக்கத்திற்கு 2 ஏக்கர் நிலத்தை நானும், எனது தகப்பனாரும கிரையம் செய்தோமா என்றால் இல்லை. 1,2 பிரதிவாதிகள் தான் செய்தோம். 2 ம் பிரதிவாதி சந்திரன் எனது தாத்தா குடியிருந்த வீட்டில் தற்போது வசிக்கிறாரா என்றால் எனது தாத்தா இறந்த போது அவர் செலவு செய்ததால் அந்த வீடு அவருக்கு ஒதுக்கப்பட்டது.

3. எனது தாத்தா உயிருடன் இருக்கும் போது தனது வாரிசுகளுக்கும் அனைத்து சொத்துக்களையும் பிரிவினை செய்து கொடுத்துவிட்டார் என்றும், தாவா சொத்திற்கான பத்திரம் எனது தாத்தா பெயரில் இருப்பதை பயன்படுததி தாவா சொத்து பாகம் பிரிக்கப்படவில்லை என பொய்யாக வழக்காடி வருகிறேன் என்றால் சரியல்ல. எனக்கும் , குடியரசுக்கும் எனது தாத்தா எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் சொத்தையும் சேர்த்து 5 பாகமாக பிரித்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. கருப்பாயி அம்மாள் என்பவரை தான் எனது தாத்தா திருமணம் செய்து கொண்டார் என்றும், அவர்தான் முதல் மனைவி என்றால் சரியல்ல.

4. கன்னியம்மாள் தான் முதல் மனைவி. கன்னியம்மாள் என்பவருக்கு ஏற்கனவே வேறு ஒருவருடன் திருமணம் ஆகிவிட்டது என்றும், அவரை விட்டு விட்டு வந்து எனது தாத்தா ராசமூப்பனுடன் சேர்க்கையில் இருந்தார் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் 1, 2 பிரதிவாதிகள் பாக்ததிற்கு பிரிந்து அவர்கள் அனுபவம் செய்து வந்து பின்னிட்டு 7, 8 பிரதிவாதிகளுக்கு விற்றுள்ளார்கள் என்றால் சரியல்ல. ஏற்கனவே பாகம் பிரிந்த சொத்துக்களை மீண்டும் பாகம் பிரிக்க வேண்டும என பொய்யான சங்கதிகளுடன் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால்சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி

**Additional District Munsif,**
**Kulithalai.**